# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008, பெப்புருவரி மாதம் 01 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 12.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ.—கூ. 34/2005

### பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கம்" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப் பட்ட பௌத்த சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களை யும், காரியங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் இலங்கையில் உருவாக்கப் பட்டிருந்ததாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட பம்பலப்பிட்டி பௌத்த சங்கமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அவ்விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்கு மாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "பௌத்த சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பம்பலப்பிட்டிய தொடர்மாடி பௌத்த சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேரத்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "பம்பலப்பிட்டி தொடர்மாடி பௌத்த சங்கம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும்.

2–PL 002344 –1,065 (2007/08)

அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பம்பலப்பிட்டி தொடர்மாடியிலும் அதனைச் சூழவும் வசிக்கின்ற பௌத்தர்களின் பௌத்த மதத்தையும், பௌத்த வழிபாட்டுமுறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்களை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் ;

(ஆ) எல்லா அம்சங்களிலும் பௌத்த கல்வியையும் அவற்றைப் பற்றிய ஆய்வையும் ஆதரித்தலும், மேம்படுத்தலும் ;

(இ) பௌத்த மதத்தைப் போதிப்பதற்கென நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் பேணுதலுடன் பௌத்த தருமம் மற்றும் பௌத்த கொள்கைகளை மக்களுக்கு பயிற்றுவித்தல் ; அத்துடன் பௌத்த தருமம் மற்றும் பௌத்த கொள்கைகளுக்கிணங்க தமது வாழ்க்கை நெறியை முன்னெடுத்துச் செல்வதனை ஊக்குவித்தல்;

(ஈ) விகாரைகள், ஆச்சிரமங்கள், ஸ்தலங்கள், துறவிகள் தங்குமிடங்கள் மற்றும் வேறு சமய நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும் அத்துடன் பௌத்த விழாக்கள், சமயச் சடங்குகள், வழிபாட்டுமுறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்களை மேம்படுத்தல், வளர்த்தல் மற்றும் பேணுதல் ;

(உ) பம்பலப்பிட்டி தொடர்மாடியிலும் சூழவும் வசிக்கின்ற பௌத்த சமூகத்தினருக்கு கல்விசார் வசதிகளையும் தொடர்புபட்ட சேவைகளையும் ஏற்பாடு செய்தல் ;

(ஊ) சமுதாயத்தின் சமாதானத்தை மேம்படுத்தலும் மத, இன, இனத்துவ, சாதி ரீதியான ஒற்றுமையைப் பேணுதலும் ;

(எ) பம்பலப்பிட்டி தேசிய தொடர்மாடிகளிலுள்ள பௌத்த சமுதாயத்தவரின் நலன்கருதி சமூகநல சேவைகளை ஏற்பாடு செய்வதுடன் சமூகநல நிலையங்கள் மற்றும் நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் பேணுதல் ;

(ஏ) பம்பலப்பிட்டி தொடர்மாடியிலும் அதனைச் சூழவும் உள்ள பௌத்தர்களின் நன்மைக்காக நூலகங்கள், தகவல் மற்றும் மூலவள நிலையங்களைத் தாபித்தலும், பேணுதலும் ;

(ஐ) சுயதொழிலாக தொழில்நுட்ப அல்லது அதையொத்த ஏதேனும் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு பம்பலப் பிட்டி தொடர்மாடியிலும் அதனைச் சூழவும் உள்ள எவரேனும் பௌத்தருக்கு உதவுதலும் உதவியளித் தலும் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் கைத்தொழி லில் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தலும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத் துச் செல்வதற்கு கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள் அல்லது ஏனைய செயற் பாடுகளை நடாத்துதல் ; அத்துடன்

(ஓ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள் களைக்கொண்டுள்ள வேறு கழகங்கள், ஒழுங்கமைப்பு கள் மற்றும் சங்கங்களுடன் நட்புறவை ஏற்படுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமை மற்றும் நிர்வாக அலுவல்கள் தலைவர், உப தலைவர்கள் நால்வர், உதவிச் செயலாளர், பொருளாளர், உதவிப் பொருளாளர் மற்றும் பம்பலப்பிட்டி தேசிய தொடர்மாடித் தொகுதியில் நிரந்தரமாக வதிவோர் மத்தியிலிருந்து கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் குழுவென குறிப்பீடுசெய்யப்படும்) நிறைவேற்றுக்குழுவொன்றின்மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் வலுவிலுள்ள விதிகளுக்கிணங்கவும் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற குழுவாதல் வேண்டும் என்பதுடன் கூட்டுத்தாபனத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நடாத்தப்படும்வரை பதவி வகித்தலும் வேண்டும்.

உறுப்பாண்மை இடாப்பு.

5. (1) குழு, இச்சட்டம் தொடங்கும் திகதியில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராயிருக்கும் ஒவ்வோர் ஆளும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக அதன் பின்னர் உரியமுறையில் சேரத்துக்கொள்ளப் படும் ஒவ்வோர் ஆளும் அவருடைய பெயரைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய இடாப்பொன்றை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) இடாப்பானது, பின்வரும் விடயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரதும் பெயர், விலாசம் மற்றும் தொழில் ;

(ஆ) இடாப்பில் உறுப்பினரின் பெயர் எத்தேதியில் சேர்க்கப் பட்டதோ அத்தேதி ; அத்துடன்

(இ) எவரேனும் ஆள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொரு வராக எத்தேதியன்று ஒழிக்கப்படுகின்றாரோ அத் தேதி.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

6. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்தினுள்,—

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக தேவைப் படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டடங் களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல் அல்லது வேறுவகையில் பெறுதல் ;

(ஆ) பணத்தைத் திரட்டுதல் மற்றும் காசாகவோ ஏனைய வகையிலோ அளிப்புகள், கொடைகள் நன்கொடை களைப் பெறல் ;

(இ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான அல்லது அதனால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டுமானத்தை நிறுவுதல் அல்லது நிறுவிக்கச் செய்வித்தல் ;

(ஈ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக் குறுதிப் பத்திரங்கள் அத்துடன் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப் பிடுதல், கைமாற்றுதல், கொள்வனவு செய்தல், விற்றல் ஏதேனும் வங்கியில் நடை முறை, சேமிப்பு மற்றும் வைப்புக் கணக்குகளைத் திறத்தல், இயக்குதல், பேணுதல் மற்றும் மூடுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை குழு பொருத்த மானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;

(ஊ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங் களைப் பாதிக்கின்ற சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்புக்கள், மற்றும் நிபந்தனைகளைப் பொறுப் பேற்றல், ஏற்றுக்கொள்ளல், பிரயோகித்தல், நிறை வேற்றல் மற்றும் நிர்வகித்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையா ளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்தலும், பதவியிலிருந்து நீங்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் கூட்டுத்தாப னத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளை யும் அவர்களுக்குக் கொடுத்தலும் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையிலுள்ள ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல்,

என்பன அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

7. (1) காலத்துக்குக்காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் அல்லது அத்தகைய நோக்கத்துக்காக கூட்டப்படும் அதிவிசேட பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த உறுப்பினர்களால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்தலும், மீளப்பெறுதலும், விலக்குதலும் அல்லது அவர்கள் பதவிநீக்குதலும் ;

(ஆ) குழுவைத் தேர்ந்தெடுத்தல் அல்லது குழு உறுப்பினர்களை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் குழுவின் தத்துவங்களும், கடமைகளும் நடத்தையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனமும் தொழிலுக்கமர்த்தலும் பதவிநீக்குதலும் அவர்களது தத்துவங்களும், கடமைகளும், பணிகளும், நடத்தையும் அவர்களுக்கான ஊதியக் கொடுப்பனவும் ;

(ஈ) கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தலும், தொழிலுக்கமர்த்தலும், பதவிநீக்குதலும், அத்துடன் அதற்கான ஊதியக் கொடுப்பனவும் ;

(உ) குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் அத்தகைய கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும் ;

(ஊ) குழுவினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பாண்மைக்கான தகைமைகளும் தகுதியீனங்களும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(ஏ) பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியங்கள்.

8. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், அல்லது கட்டணங்கள் அல்லது அளிப்புக்களாகக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும், குழுவினால் தீர்மானிக்கவேண்டிய வாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை மறுசீரமைப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் சீராக்குவதற்குமாக கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை, ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிதலிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் பணங்களும் மற்றும் ஆதனங்களும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும், இத்தால் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை மேம்படுத்தும்வகையில் மாத்திரமே பிரயோகிக்க வேண்டும் என்பதுடன் அதன் எப்பாகமேனும் பங்கிலாபம், பணிக்கொடை என்றவகையில் அல்லது எத்தன்மையதுமான வேறுவகையிலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கணக்குகளும், கணக்காய்வும்.

9. (1) கூட்டுத்தாபனமானது, அதனால் பெறப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான எல்லாப் பணங்களினதும் முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் குறைந்தபட்சம் ஒவ்வோராண்டும் ஒருமுறையாவது பரிசீலனை செய்யப்படுதலும் வருமான செலவுக்கணக்குகள் மற்றும் ஐந்தொகை என்பவற்றின் செம்மை கணக்காய்வாளரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்படலும் வேண்டும். இவர் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இணை உறுப்பினரொருவராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு, ஏதேனும் ஆண்டின் ஏப்பிறல் முதலாந் தேதியன்று தொடங்கி மாச்சு முப்பத்தோராம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதியாதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.*

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டு கொடுத்துத்தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் நோக்கத்திற்காக அன்றைய தினம் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கவேண்டிய எல்லாக் கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கலைப்பின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர், எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுமுள்ளனவுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதலும் வேண்டும். அந்நிறுவனமானது கூட்டுத்தாபனத்தின் கலைப்பின்போது அல்லது உடன்முன்னர் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

13. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர், செயலாளர், பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான எச்சாதனத்திலும் பொறிக்கப்படல் ஆகாது. அவர்கள் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராக கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறான தாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

14. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களை அல்லது பொறுப்புக்களைக் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்துக்கு அவரிடமிருந்து போமதியாக இருக்கக்கூடிய அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத்தொகையை விஞ்சிய ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது. பொறுப்பை வரையறுத்தல்.

15. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ, பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேறன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்